## நாட்டிலேயே எந்த மாநில அரசும் நிகழ்த்த முடியாத புதுமை:

# நான்கரை ஆண்டுகளில் 20 லட்சம் பட்டாக்கள் வழங்கி வரலாற்றுச் சாதனை!

### திருவள்ளூர் மாவட்டத்தில் நடைபெற்ற அரசு விழாவில்
### துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சிறப்புரை!





சென்னை,நவ.25-

**திருவள்ளூர் மாவட்டத்தில், நடைபெற்ற அரசு விழாவில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், 37 ஆயிரம் பேருக்கு வீட்டுமனைப் பட்டாக்கள், மகளிர் குழுக்களைச் சேர்ந்த சகோதரிகளுக்கு வங்கிக்கடன் இணைப்பு மற்றும் 50 ஆயிரம் அடையாள அட்டைகள், 2,000 பேருக்கு குடும்ப அட்டைகள் 4,000 பேருக்கு கலைஞர் கனவு இல்லம் திட்டத்தின் கீழ் ஆணைகளை வழங்கி சிறப்புரையாற்றினார்.**

**மொத்தம் சுமார் ரூ.1,500 கோடி மதிப்பில் ஒரு இலட்சத்துக்கும் அதிகமான பயனாளிகளுக்கு பல்வேறு துறைகள் சார்பில், நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.**

**அப்போது அவர், ``நான்கரை வருடத்தில் மட்டும் சுமார் 20 லட்சம் பட்டாக்களை தமிழ்நாடு முழுவதும் நம் அரசு வழங்கி சாதனை படைத்திருக்கிறது. நாட்டின் வரலாற்றிலேயே எந்த மாநிலமும் நிகழ்த்திடாத இது மிகப்பெரிய சாதனை” என்று குறிப்பிட்டார்.**

**துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய உரை வருமாறு:**

திருவள்ளூர் மாவட்டத்தில் நடைபெறும் இந்த பிரம்மாண்டமான நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில், கலந்துகொள்வதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

வேறு எந்த மாவட்டத்திலும் இல்லாத வகையில், நம் திருவள்ளூர் மாவட்டத்தில் இன்றைக்கு ஒரு லட்சத்துக்கும் அதிகமான பயனாளிகளுக்கு சுமார் 1,500 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகளைக் கொடுக்க இருக்கிறோம். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் வழங்க உத்தரவிட்டிருக்கிறார். சுமார் 325 கோடி ரூபாய் மதிப்பிலான முடிவுற்ற பணிகளைத் தொடங்கி வைத்திருக்கிறோம். , 137 கோடி மதிப்பில் புதிய பணிகளைத் தொடங்குவதற்கும் அடிக்கல் நாட்டி இருக்கிறோம்.

#### ஒன்றிய அரசின் விருது

இங்கு ஒரு முக்கியமான விஷயத்தை நான் குறிப்பிட்டாக வேண்டும். இந்தியாவிலேயே நீர்நிலையில் தன்னிறைவு பெற்ற ஊராட்சியாக, இந்த மாவட்டத்தில் உள்ள பாலாபுரம் ஊராட்சி, ஒன்றிய அரசின் விருதை பெற்றுள்ளது. இதற்காக உழைத்த மாவட்ட நிர்வாகத்துக்கும், அரசு அதிகாரிகள் - அலுவலர்களுக்கும், இதனைச் சாத்தியப்படுத்த ஒத்துழைத்த பொதுமக்களுக்கும், குறிப்பாக ஊராட்சியைச் சேர்ந்த பொதுமக்கள் அத்தனை பேருக்கும் இந்த நேரத்தில் என் வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

எந்த ஒரு மனிதனுக்கும், உண்ண உணவு, உடுத்த உடை, இருக்க இடம் என்பதுதான் மிக மிக அடிப்படையானத் தேவைகள். இந்தத் தேவைகளைப் பூர்த்தி செய்யப் பார்த்துப் பார்த்துத் திட்டங்களைத் தீட்டியவர்தான் நம்முடைய முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள்.

குறிப்பாக, கலைஞர் அவர்கள்தான் ஊருக்கு ஊர், தெருவுக்குத் தெரு ரேஷன் கடைகளைத் திறந்து வைத்தார். இன்றைக்குத் தமிழ்நாட்டில் உணவுப் பற்றாக் குறையே இல்லை என்கிற நிலையை உருவாக்கியவர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள்.

அதற்கு அடையாளமாகத்தான், இன்றைக்கு இந்த நிகழ்ச்சியில் மட்டும் 2,000 பேருக்கு ரேஷன் அட்டைகளைக் கொடுக்க இருக்கிறோம். 10 ஆண்டுகளுக்கு முன்பெல்லாம் குடும்ப அட்டை வாங்கக் கஷ்டப்பட்டு நடையாய் நடப்பார்கள்.

#### உங்களுடன் ஸ்டாலின் முகாம்

ஆனால், இப்போது நம்முடைய திராவிட மாடல் ஆட்சியில், ``உங்களுடன் ஸ்டாலின் முகாம்” நடத்த நம் முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டிருந்தார். அந்த முகாமில் அரசே மக்களைத் தேடி வந்து ரேஷன் கார்டு - பட்டா - அரசுச் சான்றிதழ்கள் என்று பல சேவைகளை வழங்கி இருக்கிறது.

அதன் தொடர்ச்சியாகத்தான், இன்றைக்கு இந்த நிகழ்ச்சியில் மட்டும் சுமார் 37 ஆயிரம் பேருக்கு வீட்டு மனைப் பட்டாக்களைக் கொடுக்க இருக்கிறோம். இது மிகப்பெரிய ஒரு சாதனை, மகிழ்ச்சியான தருணம்.

சமீபத்தில்கூட, இந்த மாவட்டத்தில் நடந்த நிகழ்ச்சியில் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சுமார் 65 ஆயிரம் பேருக்கு வீட்டுமனைப் பட்டாக்களை வழங்கினார். இந்த நான்கரை வருடத்தில் மட்டும் சுமார் 20 லட்சம் பட்டாக்கள் தமிழ்நாடு முழுவதும் நம் அரசு வழங்கி இருக்கிறது. நாட்டின் வரலாற்றிலேயே இது மிகப்பெரிய ஒரு சாதனை.

பட்டா என்பது ஏதோ... அரசு, உங்களுக்குத் தருகின்ற சலுகை கிடையாது. அது உங்களின் உரிமை. பட்டா பெற்ற அனைவருக்கும் எனது வாழ்த்துகள். இன்றைக்கு உங்களுடைய சொந்த இடத்தில் நீங்கள் மகிழ்ச்சியாக, நிம்மதியாகத் தூங்கலாம்.

இன்னொரு பிரச்சினை என்னவென்றால், பட்டா உள்ள இடம் இருக்கும்; ஆனால் ஒழுங்கான வீடு இருக்காது. சொந்த வீடு என்பது ஏழை, எளிய மக்கள் - நடுத்தரக் குடும்பத்து மக்களுக்கு மிகப் பெரிய ஒரு கனவாக - ஏக்கமாக இருக்கும்.

#### கலைஞர் கனவு இல்லம்

இப்படி வீடற்ற மக்களுக்கு வீடு கொடுக்க வேண்டும் என்பதற்காகத்தான், கலைஞர் அவர்கள், குடிசை வீடுகளைக் கான்கிரீட் வீடுகளாக மாற்றும் திட்டத்தைக் கொண்டுவந்தார்கள். அப்படிப்பட்ட நம்முடைய கலைஞர் அவர்கள் பெயரிலேயே, நம்முடைய முதலமைச்சர் அவர்கள், கலைஞர் கனவு இல்லம் திட்டத்தைச் செயல்படுத்திக் கொண்டு இருக்கிறார்கள். இந்தத் திட்டம் மூலம் வீடு கட்டுவதற்கான ஆணைகளை சுமார் 4 ஆயிரம் பயனாளிகளுக்கு இன்று கொடுக்க இருக்கிறோம்.

கலைஞர் கனவு இல்லம் தொடர்பாக, ஒரு சின்ன விஷயத்தை இங்கு நான் உங்களுக்கு எல்லாம் நினைவுபடுத்த விரும்புகிறேன். சமீபத்தில், “கல்வியில் சிறந்த தமிழ்நாடு” என்ற ஒரு நிகழ்ச்சி, சென்னையில் நடத்தப்பட்டது. அதை நீங்கள் பலபேர் தொலைகாட்சி, யூடியூப் சேனல்களில் பார்த்து இருப்பீர்கள்.

அந்த நிகழ்ச்சியில் தென்காசி மாவட்டத்தைச் சேர்ந்த பிரேமா என்ற ஒரு மாணவி பேசினார். மழை பெய்தால் ஒழுகுகிற பழைய வீட்டில் இருப்பதாக அந்த மாணவி தங்கள் குறையை முதலமைச்சரிடம் தெரிவித்தார்கள். அந்த மாணவி பேசிய அடுத்த 24 மணி நேரத்தில், அந்த மாணவியின் குடும்பத்துக்குக் கலைஞர் கனவு இல்லம் திட்டத்தில் வீடு ஒதுக்கி, நம்முடைய முதலமைச்சர் அவர்கள், அந்த மேடையிலேயே உத்தரவிட்டார்கள்.

பேப்பரில் உத்தரவு போட்டதுடன் நிற்கவில்லை. அவர் ஊருக்கே சென்று, வீடு கட்டுகிற பணியை ஆய்வு செய்து, அந்த மாணவியை வாழ்த்தினார் நம் முதலமைச்சர் அவர்கள். சென்ற மாதம் வீடு இல்லை என்று சொன்ன ஒரு மாணவி, இந்த மாதம் தன் கண் முன்னால் தனக்கான வீடு கட்டப்பட்டுக் கொண்டிருப்பதைக் கண்டு மகிழ்ச்சி அடைகிறார்.

அதே மாதிரி, இன்னொரு சம்பவம் இந்த திருவள்ளூர் மாவட்டத்தில் நடந்தது. இந்தத் திருவள்ளூர் மாவட்டம், ஆவடியைச் சேர்ந்த குழந்தை டான்யா. முகச்சிதைவு நோயால் அவதிப்பட்ட அவருக்கு, நம்முடைய முதலமைச்சர் அவர்கள், உரிய சிகிச்சை வழங்க வேண்டும் என்று உடனடியாக உத்தரவிட்டார்கள். சிகிச்சை முடிந்து வீடு திரும்பியதும், நம்முடைய முதலமைச்சர் அவர்களே ஆவடி ஸ்ரீவாரி நகரில் இருக்கின்ற டான்யாவின் வீட்டுக்கேச் சென்று அந்தக் குழந்தையைப் பார்த்து வாழ்த்தினார்கள்.

#### திராவிட மாடல் ஆட்சி

அப்போது, அந்தக் குழந்தை ஐ லவ் யூ ஸ்டாலின் அங்கிள் (I Love You Stalin Uncle) என்று சொன்ன வார்த்தை, தமிழ்நாட்டையே நெகிழ வைத்தது. இப்படி டான்யாக்கள், பிரேமாக்களின் முகத்தில் மகிழ்ச்சியைக் கொண்டு வருகிற ஆட்சிதான், முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் ஆட்சி என்பதை, இங்கே பெருமையுடன் சொல்லிக் கொள்கிறேன்.

இந்த விழாவில் நம் விளையாட்டுத் துறை சார்பில் திருவள்ளூர் மாவட்டத்தின் பொன்னேரி, பூந்தமல்லி மற்றும் கும்மிடிப்பூண்டி தொகுதிகளில் தலா 3 கோடி ரூபாய் மதிப்பிலான மினி ஸ்டேடியம் அமைக்க அடிக்கல் நாட்டி இருக்கிறோம். இந்த மினி ஸ்டேடியங்கள் விரைவில் கட்டப்படும். அதை இந்த மாவட்ட விளையாட்டு வீரர்கள் சிறப்பாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்று வாழ்த்துகிறேன்.

இது தவிர, இன்றைக்கு இங்கே 50 ஆயிரம் மகளிர் சுய உதவிக் குழுக்களின் சகோதரிகளுக்கு அடையாள அட்டை ஐ.டி. கார்டு கொடுக்க இருக்கிறோம். நான் ஒவ்வொரு மாவட்டத்திலும், குழு சகோதரிகளுடன் சந்தித்து பேசும்போது, அவர்கள் என்னிடம் பேசுவார்கள்.

“அண்ணா, சாஃப்ட்வேர் வேலை செய்தால் மட்டும்தான் ஐ.டி. கார்டு கொடுப்பீர்களா, சாதிக்க வேண்டும் என்று வேலை செய்கிற எங்களுக்கு அடையாள ஐ.டி. கார்டு கொடுக்க மாட்டீர்களா” என்று குழுக்களைச் சேர்ந்த சகோதரிகள் உரிமையுடன் கேட்டார்கள்.

அவர்களின் கோரிக்கையை நம் முதலமைச்சர் அவர்களிடம் எடுத்துச் சொன்னேன். நம் முதலமைச்சர் அவர்கள் உடனே உத்தரவிட்டார். இன்றைக்கு இந்தியாவிலேயே எந்த மாநிலத்திலும் இல்லாமல், மகளிர் சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த அனைத்துச் சகோதரிகளுக்கும் அவர்கள் புகைப்படத்துடன் ஐ.டி. கார்டு கொடுக்கப்பட்டுள்ளது.

நம்முடைய முதலமைச்சர் அவர்கள், மகளிர் குழுக்களுக்கு வெறும் ஐ.டி கார்டு மட்டும் போதாது, அந்த ஐ.டி. கார்டு மூலமாக அவர்களுக்குப் பல்வேறு பயன்களும் கிடைக்க வேண்டும் என்று சொன்னார்கள். அந்த வகையில்தான், மகளிர் குழுவினருக்கு ஐ.டி. கார்டு கொடுக்கப்பட்டுள்ளது. இதன் மூலமாக, குழு சகோதரிகள், உங்களின் தயாரிப்புப் பொருட்களை 25 கிலோ வரை அரசுப் பேருந்துகளில் 100 கிலோமீட்டர் தூரத்திற்கு கட்டணம் இல்லாமல் எடுத்துச் செல்லலாம். இதன் மூலம் உங்களுக்கு வருகின்ற இலாபம் இன்னும் அதிகமாக இருக்கும்.

நம்முடைய ஆட்சி அமைந்த பிறகு குழு சகோதரிகளுக்கு ரூ.1 இலட்சம் கோடிக்கும் அதிகமான அளவில் வங்கிக் கடன் இணைப்பு வழங்கப்பட்டிருக்கிறது. குழுவின் தயாரிப்புப் பொருட்களுக்கு நல்ல மார்க்கெட்டிங் செய்கிறோம், அதை பொதுமக்களும் விரும்பி வாங்குகிறார்கள்.

இரண்டு நாட்களுக்கு முன்பு, மதுரையில் குழு சகோதரிகளுக்கான சரஸ் மேளா (SARAS MELA) விற்பனைக் கண்காட்சியையும், உணவுத்திருவிழாவையும் தொடங்கி வைத்தேன். இப்படி குழுவில் இருக்கின்ற சகோதரிகளுக்கு மட்டுமல்ல, தமிழ்நாட்டின் ஒட்டுமொத்த மகளிருக்கும் ஏராளமான திட்டங்களை நம் அரசு செய்துகொண்டு இருக்கிறது.

#### மகளிருக்கான கையெழுத்து

உதாரணத்துக்கு விடியல் பயணம் திட்டம். நாம் ஆட்சிக்கு வந்தவுடன் நம் முதலமைச்சர் அவர்கள் இட்ட முதல் கையெழுத்து, இங்கு வந்துள்ள மகளிருக்கான கையெழுத்து, அதுதான் விடியல் பயணம் திட்டம். இந்தத் திட்டத்தின் மூலம் தமிழ்நாட்டில் உள்ள ஒவ்வொரு மகளிரும் மாதம் 900-லிருந்து, 1,000 வரை சேமிக்கிறார்கள் என்று புள்ளிவிவரக் கணக்குகள் சொல்கின்றன.

குழந்தைகள் பயன்பெறுகின்ற முதலமைச்சர் காலை உணவுத் திட்டம். மாணவர்கள் உயர்கல்வி படிக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் கொண்டு வந்த திட்டம் புதுமைப்பெண் திட்டம். இது எல்லாவற்றுக்கும் முத்தாய்ப்பான திட்டம் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம். ஒவ்வொரு மாதமும் 1 கோடியே 15 லட்சம் மகளிருக்கு, மாதம் 1,000-ஐ நம் முதலமைச்சர் அவர்கள் உரிமைத் தொகையாகக் கொடுத்துக்கொண்டு இருக்கிறார்.

சில இடங்களில் எங்கள் பெயர் விடுபட்டுவிட்டது என்று குறைகள் இருந்தன. சமீபத்தில் நடந்த முகாம்களில் அதிகமாகப் பெறப்பட்ட மனுக்கள், இந்த உரிமைத் தொகைக்காகத்தான். நான் சட்டப்பேரவையில் முதலமைச்சரின் அறிவுறுத்தலின் பேரில் அறிவித்தேன். வருகின்ற டிசம்பர் 15-ஆம் தேதி முதல் விடுபட்ட மகளிருக்கும் நிச்சயம் மகளிர் உரிமைத் தொகை வழங்கப்படும் என்ற வாக்குறுதியைக் கொடுத்திருக்கிறேன். வருகின்ற டிசம்பர் 15-ஆம் தேதி அனைத்து மகளிருக்கும் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டத் தொகை சென்று சேரும்.

இப்படிப் பெண்கள் - திருநர்கள் - மாற்றுத்திறனாளிகள் - ஏழை - எளிய - ஒடுக்கப்பட்ட மக்கள் என்று அனைத்துத் தரப்பின் முன்னேற்றத்துக்காகவும் நம் திராவிட மாடல் அரசு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

இந்த அரசு எப்படி உங்களுக்கு ஆதரவாக இருக்கிறதோ, அது மாதிரி இந்த அரசுக்கு நீங்கள் எப்போதும் ஆதரவாக இருக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். உங்களுக்காக இன்னும் அதிகமாக உழைக்க நம் முதலமைச்சர் அவர்களும், நம் அரசும் தயாராக இருக்கிறது. ஆகவே, திராவிட மாடல் அரசு தொடர நீங்கள் அனைவரும் துணை நிற்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நலத்திட்டங்களைப் பெற்ற அத்தனைப் பேருக்கும் மீண்டும் என்னுடைய வாழ்த்துகள். இந்த நிகழ்ச்சியை மிகச் சிறப்பாக ஏற்பாடு செய்த திருவள்ளூர் மாவட்ட நிர்வாகத்துக்கு மீண்டும் என் வாழ்த்துகளைத் தெரிவித்து, வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சிறப்புரையாற்றினார்.

#### பங்கேற்றவர்கள்

அமைச்சர் ஆவடி நாசர், நாடாளுமன்ற உறுப்பினர் சசிகாந்த் செந்தில், சட்டமன்ற உறுப்பினர்கள் கிருஷ்ணசாமி, சுதர்சனம், வி.ஜி.ராஜேந்திரன், சந்திரன், டி.ஜே.கோவிந்தராஜன், காரபாக்கம் கணபதி, துரை.சந்திரசேகர், மாநகராட்சி மேயர் உதயகுமார், திருவேற்காடு நகர் மன்றத் தலைவர் என்.எ.கே.மூர்த்தி, மாவட்ட ஆட்சித் தலைவர் பிரதாப் ஐ.ஏ.எஸ்., மாநகராட்சி ஆணையர் சரண்யா ஐ.ஏ.எஸ்., சார் ஆட்சியர் ரவிக்குமார் ஐ.ஏ.எஸ்., மாவட்ட வருவாய் அலுவலர் சுரேஷ், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் ஜெயக்குமார், ரமேஷ், அரசு அதிகாரிகள், அலுவலர்கள், ஆகியோர் உள்பட கழக முன்னணியினர் பலரும் கலந்து கொண்டனர்.



சென்னை மண்டலத்திற்குட்பட்ட வேளச்சேரி, சோழிங்கநல்லூர், திருப்போரூர், செங்கல்பட்டு, தாம்பரம், பல்லாவரம், ஆலந்தூர், சைதாப்பேட்டை, விருகம்பாக்கம், தியாகராயநகர், மைலாப்பூர் ஆகிய சட்டமன்றத் தொகுதிகளில் நடைபெற்று வரும் SIR தீவிர வாக்காளர் பட்டியல் திருத்தப் பணிகளை, கழக துணைப் பொதுச் செயலாளரும் மண்டல பொறுப்பாளருமான ஆ. இராசா எம்.பி. நேரில் ஆய்வு செய்து, தொடர்புடைய பொறுப்பாளர்களுடன் ஆலோசனை மேற்கொண்டார்.



முதலமைச்சர் அவர்கள் உத்தரவின்படி நேற்று (24.11.2025) சென்னை, கோயம்பேடு புறநகர் பேருந்து நிலையத்தை பி.கே.சேகர்பாபு அரசு உயர் அலுவலர்களுடன் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வின்போது கூடுதல் தலைமைச் செயலாளர் காகர்லா உஷா, உயர் அதிகாரிகள் .கோ.பிரகாஷ், அ.சிவஞானம், டாக்டர் த.பிரபுசங்கர், ஆணையாளர் .எச்.ஆர்.கௌஷிக், துணை ஆணையர் சுஜித் குமார், மகாவிஷ்ணு, பாலமுருகன், ராஜன்பாபு மற்றும் அரசு அலுவலர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.